ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2240/20 - 2021 අගෝස්තු මස 11 වැනි බදාදා - 2021.08.11
2240/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்

2 மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| | I ஆம் நிரல் | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| | வியாபாரப் பண்ட இனம் | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.05 | 0305.54.10 | நெத்தலிகள் | கிலோ கிராமிற்கு 100.00 ரூபா |
| 2 | | 0305.52.00<br>0305.53.00<br>0305.54.90<br>0305.59.30<br>0305.59.90 | உலர்த்திய மீன்கள் (கருவாடு) | கிலோ கிராமிற்கு 100.00 ரூபா |

1A — G 34537 - 495 (2021/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 3 | 04.05 | 0405.10 | வெண்ணெய் கட்டி | கிலோ கிராமிற்கு 880.00 ரூபா |
| | | 0405.20 | பால் பரவற் பொருட்கள் | கிலோ கிராமிற்கு 880.00 ரூபா |
| | | 0405.90 | பிற | கிலோ கிராமிற்கு 880.00 ரூபா |
| 4 | 09.10 | 0910.99.10 | வெந்தயம் | கிலோ கிராமிற்கு 50.00 ரூபா |
| 5 | 11.02 | 1102.90.20 | குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) மாவு | கிலோ கிராமிற்கு 150.00 ரூபா |
| 6 | 12.07 | 1207.50 | கடுகு விதைகள் | கிலோ கிராமிற்கு 62.00 ரூபா |
| 7 | 25.01 | 2501.00 | உப்பும் (மேசை உப்பும், இயல்பிழந்த உப்பும் உட்பட) தூய சோடியம் குளோரைட்டும், திரவக் கரைசலாக அல்லது சேர்க்கப்பட்ட துடிப்படைவதை எதிர்க்கும் காரணிகள் அல்லது இலகுவாகப் பாய்வதை ஊக்கு விக்கும் காரணிகள், சேர்க்கப்பட்டவை அல்லது இம் மூன்று நிலைகளிலும் இல்லாதது ; கடல் நீர் | கிலோ கிராமிற்கு 40.00 ரூபா |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, மேலேயுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள, எச். எஸ். தலைப்பு 2501.00 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மருந்து உற்பத்தியாக்கும் நிறுவனங்களாலும் மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், வர்த்தக நோக்கமல்லாது இறக்குமதி செய்யப்படும் உப்பின் (சோடியம் குளோரைட் வீ.பீ) மீதான பிரயோகிக்கக்கூடிய விசேட வியாபாரப் பண்ட அறவீடான கிலோகிராமிற்கு ரூபா 40.00 இல் இருந்து கிலோ கிராமிற்கு ரூபா 10.00 அறவிடப்பட்ட பின்பு மிகுதிப் பெறுமதி கைவிடப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இக்கட்டளையானது 2021, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

4. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், மேற்கொள்ளப்பட்டதும் 2020, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2195/ 29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2020, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2206/ 10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதுமான கட்டளையானது 2021, ஓகத்து மாதம் 12 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**பஸில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, ஓகத்து 10.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.